# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் • திருவள்ளுவர் ஆண்டு 2056, - ஜூலை 28, 2025

Weekly E-paper • July 28, 2025





# மதுரையில் பேரவையின் 16ஆம் பொதுக்குழு

## குடியரசு துணைத் தலைவர் பதவியின் மாண்பை குலைத்த பா.ஜ.க

வழக்கறிஞர் இராம. வைரமுத்து

## வாஞ்சிநாதனுக்கு ஆதரவாக....

தலையங்கம்

## அதிமுகவின் முடிவுரையை எழுதுகிறார் எடப்பாடி பழனிசாமி!

காசு. நாகராசன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் • திருவள்ளுவர் ஆண்டு 2056, - ஜுலை 28, 2025

Weekly E-paper • July 28, 2025


## மதுரையில் பேரவையின் 16ஆம் பொதுக்குழு

**திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் 16 ஆவது பொதுக்குழுக் கூட்டம் பேரவைத் தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் தலையில், பொதுக்செயலாளர்சிற்பிசெல்வராஜ் முன்னிலையில் 27-07-2025 அன்று மதுரையில் நடைபெற்றது. பொதுக்குழுவில் நிறைவேற்றிய தீர்மானங்கள்:**




1. அண்மையில் மறைந்த திராவிட இயக்கத் தமிழர் பேரவை முன்னாள் தலைமைச் செயற்குழு உறுப்பினர் தோழர் மேட்டூர் குமார், திருச்சி மாவட்ட முன்னாள் செயலாளர் தோழர் பழ. செல்வன், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மூத்த மகன் மு.க.முத்து, பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன், இயக்குநர் வேலு பிரபாகரன் உள்ளிட்ட பெரியாரிய உணர்வாளர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப் படுகிறது

2. கடந்த ஏப்ரல் மாதம் கோவையில் நடைபெற்ற சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழா மாநில மாநாட்டிற்குத் தங்களுடைய பேருழைப்பை நல்கிய பேரவையின் பொறுப்பாளர்கள் அனைவருக்கும் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்வதோடு மாநாட்டிற்கு வருகை தந்து சிறப்பித்த துணை முதல்வர் அவர்கள் உள்ளிட்ட அனைத்து சிறப்பு விருந்தினர்களுக்கும் நன்றி தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது

3. பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான 15.09.2025 தொடங்கி பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளான 03.02.2026 வரையிலான காலத்திற்குள் "ஏன் தொடர வேண்டும் திராவிட மாடல் அரசு?" என்ற தலைப்பில் 12 மாபெரும் பொதுக்கூட்டங்களைதமிழ்நாடுமுழுவதும் நடத்துவது என்றும், 05.02.2026 முதல் தொடங்கி 15.02.2026 வரையிலான பத்து நாட்களில் இதே தலைப்பில் ஊர்திப் பயணத்தை கன்னியாகுமரி முதல் மதுரை வரை நடத்துவது என்று தீர்மானிக்கப்படுகிறது

4. பீகார் மாநிலத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் நெருங்கும் சூழலில் சிறப்புத் தீவிர திருத்தம் என்ற பெயரில் வாக்காளர் பட்டியலில் இருந்து 65 இலட்சத்திற்கும் மேற்பட்ட வாக்காளர்களை நீக்கியிருக்கும் தேர்தல் ஆணையத்தின் ஜனநாயக விரோதச் செயலுக்குக் கடுமையாக கண்டனம் தெரிவிப்பதோடு இதனை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்தப் படுகிறது.

5. மதுரையைச் சேர்ந்த வழக்கறிஞர் வாஞ்சிநாதன் அவர்கள் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்திருப் பதைப் பேரவை வன்மையாக கண்டிப்பதுடன் அவருக்கு எல்லா வகையிலும் திராவிட இயக்கத் தமிழர் பேரவை துணை நிற்கும் என்று தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது. •








# குடியரசு துணைத் தலைவர் பதவியின் மாண்பை குலைத்த பா.ஜ.க

## வழக்கறிஞர் இராம. வைரமுத்து

இந்தியாவின் 14 ஆவது குடியரசு துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு 11.08.2022 அன்று பதவியேற்ற ஜெகதீப் தன்கர் தனது உடல்நிலையைக் காரணம் காட்டி இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 67(a) இன் படி பதவி விலகினார். குடியரசு துணைத் தலைவர் இது போன்று தனது பதவி காலத்திற்கு இடையே பதவி விலகுவது இந்தியாவில் இதுவே முதல் முறை. இதற்கு முன்னர் வி.வி.கிரி, ஆர்.வெங்கட்ராமன் ஆகியோர் குடியரசுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டதால் தங்களது குடியரசு துணைத் தலைவர் பதவியிலிருந்து குறுகிய காலத்தில் விலகினர்.

மருத்துவக் காரணங்களுக்காக ஜெகதீப் தன்கர் தனது பதவியிலிருந்து விலகுவதாக இருந்தால் அம்முடிவை அவர் நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் தொடங்குவதற்கு முன்பே எடுத்திருப்பார். மாறாக கூட்டத் தொடரின் முதல் நாளில் அவையையும், அலுவல் ஆய்வுக் குழு கூட்டத்தையும் நடத்திய பிறகு பதவி விலகலை அறிவித்திருப்பதால் இம்முடிவு பலத்த சந்தேகங்களை எழுப்புகிறது.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரின் முதல் நாளான 21.07.2025 அன்று மதியம் 01.00 மணிக்கு அலுவல் ஆய்வுக் குழு கூட்டத்தை ஜெகதீப் தன்கர் நடத்தினார். இதில் பா.ஜ.க சார்பில் மாநிலங்களவை பா.ஜ.க தலைவரான ஜே.பி.நட்டா, நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் கிரண் ரிஜ்ஜூ ஆகியோர் பங்கேற்றனர். அதே நாள் மாலை 04.30 மணிக்கு அக்கூட்டம் மீண்டும் நடைபெற்ற போது மாநிலங்களவை பா.ஜ.க தலைவரான ஜே.பி.நட்டா, நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் கிரண் ரிஜ்ஜூ ஆகியோர் பங்கேற்கவில்லை. அத்துடன் தாங்கள் கூட்டத்தில் பங்கேற்க இயலாதது பற்றி குடியரசு துணைத் தலைவரிடம் தெரிவிக்கவும் இல்லை. அவர்களுக்கு பதிலாக அக்கூட்டத்தில் பா.ஜ.க ஒன்றிய இணை அமைச்சர் எல்.முருகன் மட்டுமே கலந்து கொண்டார். அன்று இரவே குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தன்கரின் பதவி விலகல் அறிவிப்பு வெளியானது.

இதன் பின்னணியை ஆராய்ந்த போது, அண்மையில் தனது வீட்டில் பணமூட்டை சிக்கியதால் சர்ச்சைக்குள்ளான நீதிபதி யஷ்வந்த் சர்மா பதவி நீக்கம் தொடர்பாக எதிர்க்கட்சிகள் அளித்த தீர்மானத்தை ஆளும் பா.ஜ.கவோடு ஆலோசிக்காமல் ஏற்றுக் கொண்டது தான் ஜெகதீப் தன்கரின் பதவி விலகலுக்கு காரணம் என்பது தெரிய வருகிறது

ஒரு நீதிபதியை பதவி நீக்கம் செய்வதற்கான தீர்மானம் கொண்டு வரக் கோரி மக்களவையில் குறைந்தது 100 உறுப்பினர்களும், மாநிலங்களவையில் குறைந்தது 50 உறுப்பினர்களும் கையெழுத்திட்டு மனுத் தாக்கல் செய்ய வேண்டும். இந்த மனுவை மக்களவைத் தலைவர் மற்றும் மாநிலங்களவைத் தலைவரான குடியரசு துணைத் தலைவர் ஏற்றுக்கொள்ளலாம் அல்லது நிராகரிக்கலாம். அந்த வகையில் நீதிபதி யஷ்வந்த் வர்மா மீதான பதவி நீக்க தீர்மானம் தொடர்பாக 63 மாநிலங்களவை உறுப்பினர்கள் கையெழுத்திட்டு இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவுகள் 124, 217 மற்றும் 218 இன் கீழ் தாக்கல் செய்த மனுவை ஜெகதீப் தன்கர் ஏற்றுக் கொண்டார். முன்னாள் பிரதமர் சந்திரசேகர் அரசில் நாடாளுமன்ற விவகாரத்துறை இணை அமைச்சராக பணியாற்றி அனுபவம் பெற்றவர் என்பதால் அவர் சட்டப்படி இம்முடிவை எடுத்திருக்கலாம்

இதனால் அதிருப்தி அடைந்த ஆளும் பா.ஜ.க மற்றும் ஆர்.எஸ்.எஸ் ஜெகதீப் தன்கருக்கு பல்வேறு வகையில் நெருக்கடி அளித்ததாகவும், அதன் காரணமாகவே அவர் பதவி விலகலை அறிவித்ததாகவும் டெல்லி வட்டாரங்களில் பேசப் படுகிறது.

"இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையை மாற்றக் கூடாது" என்று கேசவானந்த பாரதி வழக்கில் இந்திய உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பையும், "குடியரசுத் தலைவர் மற்றும் ஆளுநர், சட்டமன்றம் நிறைவேற்றி அனுப்பிய சட்டமுன்வடிவுகளில் முடிவெடுக்க கால வரையறை நிர்ணயிக்கப்படுகிறது" என்று தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில் இந்திய உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பையும் கடுமையாக விமர்சித்தவர் ஜெகதீப் தன்கர். பல்கலைக்கழக வேந்தர் பதவியை உச்சநீதிமன்றம் பறித்த பிறகு தமிழ்நாடு ஆளுநர் ஆர். என்.ரவி நடத்திய துணை வேந்தர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு புதிய தேசிய கல்விக் கொள்கையை ஆதரித்துப் பேசியவர் ஜெகதீப் தன்கர். மாநிலங்களவையில் ஒருதலைப் பட்சமாக இவர் நடந்து கொண்டதால் எதிர்க்கட்சிகள் இவர் மீது 2024 டிசம்பர் மாதம் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது

இவ்வாறு பா.ஜ.க மற்றும் ஆர்.எஸ்.எஸ் போன்ற அமைப்புகளுக்கு ஆதரவாக நடந்து கொண்ட ஜெகதீப் தன்கர் இந்த ஒரு விவகாரத்துக்காக அவமானப்படுத்தப்பட்டு பதவியிலிருந்து விலகும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்

74 வயது நிறைவில் உள்ள இவரது பதவி விலகல் அறிவிப்பு ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் ஏற்பாடு என்றும், இதை வைத்து எதிர் வரும் செப்டம்பர் மாதம் 75 வயதை நிறைவு செய்ய இருக்கும் பிரதமர் மோடி பதவி விலக அழுத்தம் கொடுக்கப்படும் என்ற தகவலும் ஆங்காங்கே பரவியுள்ளது.

எது எப்படியாயினும் ஜெகதீப் தன்கரோ, மோடியோ யாராக இருந்தாலும் தங்களது திட்டம் நிறைவேறியதும் அவர்களை தூக்கி எறிய ஆர்.எஸ்.எஸ் தயங்காது என்பதை இதன் மூலம் புரிந்து கொள்ள முடிகிறது. இனியாவது பா.ஜ.க மற்றும் ஆர்.எஸ்.எஸ் அமைப்புக்களில் செயல்படுவோர் சிந்தித்து தங்களைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

# அதிமுகவின் முடிவுரையை எழுதுகிறார் எடப்பாடி பழனிசாமி!

காசு. நாகராசன்

பாஜகவின் ஆலோசனைப்படி அமைக்கப்பட்ட வியூக வகுப்பாளர்களின் தவறான வழிகாட்டலில் தப்புத் தப்பாகச் செயல்படுகிறார் அதிமுகவின் கடைசிப் பொதுச் செயலாளர் திருவாளர் எடப்பாடி பழனிசாமி அவர்கள்.

தமிழ்நாட்டு அரசியல் களத்தில் ஏறக்குறைய அரை நூற்றாண்டு காலம் கோலோச்சி வந்த ஒரு மிகப்பெரிய கட்சியின் கடைசிப் பக்கத்தை எழுதிக்கொண்டிருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி, மக்களை விட்டுவிலகி.

1967 க்குப் பிறகு சாதாரண குப்பனையும், சுப்பனையும் படிக்க வைத்து அதிகாரத்தில் அமர்த்தி, அவர்களின் வாரிசுகளை இன்று அமெரிக்க - அய்ரோப்பிய நாடுகளின் ஒயிட்காலர் ஜாப் எனப்படும் உச்ச பதவிகளுக்கு அனுப்பி வைத்திருக்கிறது திமுகழக ஆட்சி அதிகாரம் என்பது எடப்பாடிக்குத் தெரியவில்லை.

நூறாண்டுகளுக்கும் மேலாக சுயமரியாதை உணர்வோடு, தேநீர்க் கடையிலும், சவரக் கடைகளிலும், தெரு முனையிலும் அரசியல் பேசிப் பழகி வளர்ந்திருக்கிற தமிழ்நாட்டு மக்கள், பார்ப்பனர்களால் கட்டப்பட்டிருக்கிற ஜாதி , கடவுள், மதம், பண்பாடு என்கிற எல்லாவகை ஆயுதங்களையும் வெறும் பொழுதுபோக்கு விசயங்களாகக் கருதுகிறவர்களே தவிர அரசியலில் கலக்க மாட்டார்கள் என்கிற எளிய உண்மையை, மூவாயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து அதிகாரம் செய்கிற பார்ப்பனர்கள் உணர்ந்திருக்கிறார்கள். பாவம் , எம்ஜியார் ஜெயலலிதா என்று தமிழ்நாட்டுக்குள்ளேயே குப்பை கொட்டி வருகிற எடப்பாடி பழனிசாமி வகையறாக்களுக்கு இந்த எளிய அரசியல் புரியவில்லை.

தமிழ்நாட்டின் 68 ஆயிரம் வாக்குச் சாவடிகளில் முகவர்களை நியமிக்கும் தகுதி, நகரம் ஒன்றியம் என குக்கிராமங்கள் வரைக்கும் கிளைக் கழகங்கள், 20% நிரந்தர வாக்கு வங்கி என்கிற மாபெரும் மக்கள் செல்வாக்கு மிகுந்த ஒரு கட்சியை கேவலம் ஒரு சதவீதம் செல்வாக்கு கூட இல்லாத ஒரு கட்சிக்காரன் எங்கயோ



டெல்லியில் இருந்து வந்து, இல்லையில்லை இவர்களை டெல்லிக்கு இழுத்துக் கொண்டுபோய் நிறுத்தி ,

"நாம ஜோடி போடலாமா? "னு கேட்கிறான், அதற்கும் கைகட்டி வாய்பொத்தி நின்று ஒருவர் சம்மதிக்கிறார் என்றால் இது அரசியலா? இதன் பெயர் கூட்டணியா? என்பதே தமிழ்நாட்டு மக்களின் தற்போதைய கேள்வி.

எப்போது நட்டநடு ராத்திரியில் நாலு கார் மாறிப்போய் சந்தையில் மாட்டுத் தரகர்கள் பேரம் பேசுவதுபோல கமுக்கமாக கட்சியை குஜராத் மார்வாடிகளிடம் அடமானம் வைத்துவிட்டு வந்தாரோ அப்போதே அதிமுகவின் உண்மைத் தொண்டர்கள் வெறுத்துப் போனார்கள். தமிழ்நாட்டு மக்கள் அதிமுகவை முற்றாக நிராகரித்து விட்டனர்.

இப்படிப்பட்டத் தமிழ்நாட்டில், மக்களால் புறந்தள்ளப் பட்டவர்களும், நிராகரிக்கப் பட்டவர்களுமான அதிமுக-பாஜக கூட்டணியில், நாக்பூர் திட்டப்படி பார்ப்பனர்களால் உருவாக்கப்பட்ட ஒன்றிரண்டு விளையாட்டு 'பொம்மைகளை' விபரம் புரியாமல்

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## வாஞ்சிநாதனுக்கு ஆதரவாக....

வழக்கறிஞர் வாஞ்சிநாதன் ஒரு சமூக செயல்பாட்டாளர்.

அவர் மதுரை உயர்நீதிமன்றக் கிளையில் பல்வேறு வழக்குகளில் வாதாடி வருகிறார்.

சமூக பிரச்சனைகள், கூடங்குளம் அணுஉலை, மனித உரிமை மீறல், காவல் நிலைய மரணங்கள், அனைத்து சாதியினர் அர்ச்சகர் நியமனம், திருப்பரங்குன்றம் மலை விவகாரம் என்று பொதுநல வழக்குகள் உள்ளிட்ட பல்வேறு வழக்குகளில் வாதாடி வருகிறார்.z

தஞ்சை தமிழ் பல்கலைக்கழக பேராசிரியர் நியமனம் தொடர்பான மேல்முறையீட்டு மனு நீதிபதிகள் ஜி.ஆர்.சுவாமிநாதன், கே.ராஜசேகர் அமர்வில் விசாரணைக்கு வந்தது.

இந்த மேல்முறையீட்டு வழக்கில் 3வது எதிர்மனுதாரரின் வழக்கறிஞரான வாஞ்சிநாதனை அழைத்த நீதிபதி அவர்மீது நீதிமன்ற அவமதிப்பாக, வழக்கு விசாரணையை ஒத்திவைத்தார்.

நீதிபதி ஜி.ஆர்.சுவாமி நாதன் மீது ஒருபக்கச் சார்பு நிலைத் தீர்ப்பு இருப்பதாக உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதிக்குக் கடிதம் எழுதி உள்ளார் வாஞ்சிநாதன். அதைத்தான் 'கண்டம்ட் அஃப் கோர்ட்' என்று அவரே விசாரிக்கத் தொடங்கி உள்ளார்.

இது நீதிமன்ற அவமதிப்பு ஆகாது. இந்த வழக்கை நீதிபதி ஜி.ஆர்.சாமிநாதன் விசாரிக்கக் கூடாது, அவரே அவ்வழக்கைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று முன்னாள் நீதிபதி அரிபந்தாமன் சொல்கிறார்.

முன்னாள் நீதிபதிகள் உள்பட வழக்கறிஞர்கள் மத்தியில் இது பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்களும் இதற்குக் கண்டனம் தெரிவித்துள்ளார். வாஞ்சிநாதனுக்கு ஆதரவாக நாமும் நிற்போம்.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

முன்பக்கத் தொடர்ச்சி...

கூட்டணிக்கு அழைத்து மேலும் அசிங்கப்பட்டுப்போன

எடப்பாடி பழனிசாமி, விரக்தியின் உச்சத்தில் இருக்கிறார். திமுக கூட்டணிக் கட்சிகளையும், தலைவர்களையும் திட்டித் தீர்த்த பழனிசாமி, இப்போது தமிழ்நாட்டு மக்களின் ஒருமித்த ஆதரவைப் பெற்று, திராவிடமாடல் அரசின் முதலமைச்சர் அவர்களையும் தரங்குறைந்த விமர்சனங்களைச் செய்து வருகிறார். இதுவும் புதிதல்ல இது அவருடைய தானைத் தலைவியின் வழிதான்.

எடப்பாடி பழனிசாமி அமித்ஷா வீட்டிற்கு போய்வந்த நாள் முதலாக பாஜக கும்பல் கூட்டணி ஆட்சி என்றே சொல்கிறது. அதை வலுவாக மறுக்கக் கூட திராணியற்று திணறிக் கொண்டிருக்கிறார் திருவாளர் பழனிசாமி அவர்கள். இதை அதிமுகவின் தலைவர்கள் தொண்டர்கள் மட்டுமல்ல தமிழ்நாட்டு மக்கள் உட்பட யாருமே ரசிக்கவில்லை. மாறாக, எல்லோரும் சிவசேனை, அகாலி தளம், ஜனதா தளம் கட்சிகளுக்கு ஏற்பட்ட நிலைமையை நினைத்து கலங்கிப் போயிருக்கிறார்கள். தன் சொந்தக் கருத்தை, தன் சொந்த சுயமரியாதையை, தனது சொந்தக் கட்சியைக் காப்பாற்றக் கூட திராணியற்று நிற்கிற பழனிசாமியை நம்புவதற்கு அதிமுக தொண்டர்கள் தயாராக இல்லை.

திமுகவிற்கு எதிராக, சமூகநீதிக்கு எதிராக பார்ப்பனர்களால் உருவாக்கப்பட்ட அதிமுக தமிழ்நாடு சமூக அரசியல் களத்தின் நிலையறிந்து எம்ஜியார் ஜெயலலிதா ஆகியோரால் ஓரளவு பாதுகாக்கப்பட்டு வந்தது. ஆனால், இப்போது தகுதி என்கிற ஒன்றே அறியாத சிறு கூட்டத்தால், சுயமரியாதை என்பதையே உணர்ந்திடாத அடிமைகளால் அதிமுக என்கிற கட்சியின் கடைசி அத்தியாயம் எழுதப்படுகிறது.

தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றில் முதன்முறையாக இனப்பகைவர்களை நேருக்கு நேர் சந்திக்கிற போரை திராவிடமாடல் அரசு, திமுகழக கூட்டணி எதிர் கொள்கிறது. சுயமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டு நிறைவில் மீண்டும் திராவிட இயக்கக் கொடியை நாட்டிட தமிழர்கள் ஓரணியில் திரண்டு போரிட வேண்டும்! ஆம் மானமும் அறிவும் மனிதருக்கு அழகு!! •